# கதை கேளு!

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் கதை கேட்பது மிகவும் பிடிக்கும். கதை கேட்பது மிகவும் பயனுள்ள பொழுதுபோக்காகும். கதை என்பது கற்பனையாகவும் இருக்கலாம் அல்லது உண்மையில் நடந்த ஒரு நிகழ்வாகவும் இருக்கலாம். பெரும்பாலும் கதைகள் உரையாடலாக இருக்கும். அதாவது ஒருவருக்கொருவர் பேசுவது போன்று இருக்கும்.

**சான்று: காகமும் நரியும் பேசுதல், விலங்கும் மனிதர்களும் பேசுதல், மனிதர்கள் ஒருவருக்கொருவர் பேசுதல்.**

கதை என்றவுடன் நமக்கு தாத்தா பாட்டி தான் நினைவுக்கு வருவர். பெரியவர்கள் குழந்தைகளுக்கு அறிவுரைகளை கதைகள் வாயிலாகக் கூறுவர். ஒவ்வொரு மொழியிலும் கதைகள் குவிந்து கிடைக்கின்றன. தமிழில் தெனாலிராமன் கதைகள், மரியாதை ராமன் கதைகள், முல்லா மற்றும் பீர்பால் கதைகள் குறிப்பிடத்தக்கவை. இக்கட்டுரையில் நாமும் ஒரு கதையை கேட்கலாம்.

கதையின் தலைப்பு **'பேராசை பெரு நஷ்டம்'**

முன்னொரு காலத்தில் விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒருநாள் வாத்து ஒன்று கிடைத்தது. அதனைக் கொன்று இறைச்சியை உண்ண விரும்பினார். வெட்டுவதற்கு கத்தியை ஓங்கினார். 'ஐயா! என்னை வெட்டாதீர்கள்!' அட! வாத்து பேசுகிறதே! என்று விவசாயி ஆச்சர்யப்பட்டார். 'நீங்கள் என்னை வெட்டாமல் இருந்தால் நான் உங்களுக்குத் தினம் ஒரு தங்க முட்டைத் தருகிறேன்!'. என்று வாத்து கூறியது.



விவசாயியும் வாத்தைக் கொல்லாமல் வளர்த்து வந்தார். தினமும் ஒரு தங்க முட்டையை சந்தையில் விற்று செல்வந்தன் ஆனார். தினமும் ஒரே ஒரு தங்க முட்டை தானே தருகிறது! அதைக் கொன்றால்...... வயிற்றில் நிறைய தங்க முட்டை இருக்குமே! என்று அதனைக் கத்தியால் வெட்டினான். ஆனால் உள்ளே ஒரு தங்க முட்டை கூட இல்லை!. விவாசாயி ஏமாந்து போனான். இக்கதையிலிருந்து 'பேராசை பெரு நஷ்டம்' என்ற நல்ல கருத்தை அறிந்து கொள்கிறோம். கதையின் நீதியே கதையின் தலைப்பாக அமைந்துள்ளது. இவ்வாறு குழந்தைகள், கதை வழி கருத்தை அறிந்து கொள்கின்றனர்.

நல்ல பழக்கங்களைக் கற்று நல்ல குடிமகனாக வளர்வதற்கு கதைகள் துணை செய்கின்றன. அதனால் கதையைக் கேட்போம் கருத்தை அறிந்து கொள்வோம்.

**உங்களுக்குத் தெரிந்த கதைகளை சிறு சிறு வாக்கியமாக்கி எழுதவும்.**